பல்லடம்–கொச்சின் சாலையில் கரடிவாவிக்கருகில் பாலம்

* 632 வினு.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம்–கொச்சின் ரோடில், கரடிவாவிக்கு மேல்புறம் உள்ள ரோட்டில் ஒரு பாலம் கட்ட வேண்டி சம்பந்தப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம்.

(இ) நிதிப் பற்ருக்குறையிஞல் அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சீர்காழி வட்டத்துக்கு நெடுஞ்சாலைத்துறைப் பிரிவு

*633 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தாலூகாவிற்குத் தனியே நெடுஞ்சாலைத்துறையைப் பிரிவினை ஏற்படுத்தி ஒரு சப்-டிவிஷன் ஆபீசர் நியமிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சீர்காழியில் முறையான நெடுஞ்சாலைத்துறை உட்கோட்டம் ஒன்றை அமைத்து உட்கோட்ட அதிகாரி ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

எனினும், காவிரி ஆயக்கட்டுப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலைகள் விற்பனை வசதிகள் செய்து கொடுப்பதற்கான இந்திய அரசிஞல் ஒப்பளிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட விருக்கின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசு ஆணை (பலவகை) எண். 2247, பொதுப்பணித்துறை, நாள் 28—10—1971-ல் இரண்டு கோட்டங்களும் ஆறு உட்கோட்டங்களும் ஏற்படுத்த ஒப்பளிக்கப்

1972 மார்ச் 22]

பட்டுள்ளது. இதில் நெடுஞ்சாலை கிராமப் பணிகள் தலைமைப் பொறியாளர் தன்னிடம் நிலைபெற்றுள்ள அதிகாரங்களைப் பயன் படுத்தி, சீர்காழியில் தனி உட்கோட்டம் அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். இந்தத் தனி உட்கோட்டம் 28—9—1971 முதல் சீர்காழியில் செயல்படுகிறது. எந்தப் பணிக்காக இந்தத் தனி உட் கோட்டம் அமைக்கப்பட்டதோ, அந்தப் பணி முடிவடைந்த உடனே இந்த உட்கோட்டம் நீக்கிவிடப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலே சீர்காழியைப் பொறுத்தமட்டில் பொதுப் பணித் துறையில் ஒரு சப்-டிவிஷன் புதியதாக உருவாக்கப்பட்டது. அதைப் போலவே இப்பொழுது மாயூரம் பகுதியைச் சேர்ந்த சப்-டிவிஷன் மிக அதிகமான பரப்பளவு உள்ள ஏரியாக இருப்பதால், அங்கு வேலைகள் அதனால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்று அறியப்படுவதால், இனிமேலாகிலும் சீர்காழிக்குத் தனியாக ஒரு நெடுஞ்சாலை சப்-டிவிஷன் பிரிவை உருவாக்க அரசு ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பரிசிலிக்கப்படும்.

பாலாற்று பேசின் திட்டம்

*634 வின.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

"பாலாற்று பேசின்" என்று சொல்லப்படும் திட்டத்தைக் கைவிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கே. எ. வஹாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது பாலாறு படுகை அமுலில் இருக்கிற காரணத்தினால் பல பேர்கள் தங்களுடைய விவசாயத்திற்குரிய நீரை இறைக்க முடியாமல் அவதிக் குள்ளாகிறார்கள். ஆகவே, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதைக் கருதி, இந்தப் பாலாறு படுகை திட்டத்தை அரசு எடுத்துவிட உடனடியாக ஆலோசனை செய்யுமா?